රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/03/05(II)

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி: / Date: 2022.06.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களின் தாபனச் செயற்பாடுகள்</u>**

மேற்படி விடயம் தொடர்பான எனது இணையிலக்கத்தையும் 2021.12.16 ஆம் திகதியையும் கொண்ட கடிதத்துக்கு மேலதிகமானது.

02. அக்கடிதத்தின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்குத் தேவையான ஆவணங்களை அனுப்புவதில் தாமதம் காணப்படுவதுடன், உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களை உள்வாங்கியதன் பின்னர் அவர்களை வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கான இடமாற்றக் கட்டளை வழங்கப்படும் என்ற மனப்பாங்கு அந்த உத்தியோகத்தர்களிடம் காணப்படுவதே அதற்குக் காரணம் என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

03. இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படுகின்ற போதிலும், சேவைத் தேவைப்பாடுகளுக்காக அல்லது ஒழுக்காற்றுக் காரணங்களுக்காகச் செய்யப்படும் இடமாற்றங்களைத் தவிர, ஏனைய இடமாற்றங்கள் குறித்த உத்தியோகத்தரின் கோரிக்கைக் கடிதம் அவர் பணிபுரிகின்ற நிறுவனத்தின் தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே வழங்கப்படுகின்றன. மேலும் ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்படும் வருடாந்த இடமாற்றக் கட்டளையும், வருடாந்த இடமாற்ற நடைமுறைக்கு இணங்கியதாகவே வழங்கப்படும்.

04. இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் சேர்வதால் இடமாற்றங்களுக்கு உட்படுகின்ற போதிலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்பட்டவுடன் இடமாற்றங்கள் வழங்கப்படமாட்டாது என்பதை அறியத் தருவதுடன் இந்த உள்வாங்கல் செயற்பாடுகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்து இதுவரையில் உள்வாங்கல் கடிதம் வழங்கப்படாத, உங்கள் அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்குவதற்குத் தேவையான ஆவணங்களைத் தாமதமின்றி எனக்கு அனுப்பி வைக்குமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

05. மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது தேவைப்படும் ஆவணங்களிலுள்ள குறைபாடுகள் ஒவ்வொரு வாரமும் இந்த அமைச்சின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் குறைபாடாகக் காணப்படும் ஆவணங்களை விரைவில் எனக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

06. மேலும், CS/DOS/Policy/පොදු/01 என்ற எனது இலக்கத்தைக் கொண்ட 2021.10.25 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும், மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிப்பதற்காக வெளியிடப்பட்ட கடிதத்துக்கு இணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்படுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதும் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் செயல்பாடற்றுள்ள கோவைகள் பற்றிய அறிக்கையொன்று இந்த அமைச்சின் இணைய தளத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படுவதுடன் அந்தக் கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க உரிய ஆவணங்களை/தகவல்களை எனக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்